ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2092/65 - 2018 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2092/65 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

**சனாதிபதியின் பணிப்புரை**

1. திரு. எச். ரி. கமல் பத்மசிறி, செயலாளர், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
2. திரு. பந்துல விக்ரமாராச்சி, செயலாளர், சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு
3. திரு. சுனில் ஹெட்டிஆரச்சி, செயலாளர், கல்வி அமைச்சு
4. திரு. ஏ. பீ. ஜீ. கித்சிறி, செயலாளர், வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு
5. திரு. டி. எம். ஏ. ஆர். பி. திசாநாயக்க, செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
6. சனாதிபதி சட்டத்தரணி திரு. கபில எம். வைத்தியரத்ன, செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
7. திருமதி டபிள்யு. ஜே. பீ. எஸ். வீரக்கோன், செயலாளர், சமூக வலுவூட்டல்கள் அமைச்சு
8. திரு. எஸ். டி. கொடிக்கார, செயலாளர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
9. திருமதி கே. ஜீ. அசோக்கா அலவத்த, செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

ஆகியோருக்கு,

*வாழ்த்துக்கள் !*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து, 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதிய சனாதிபதியின் பணிப்புரையின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகளை நெறிப்படுத்தல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்தல் என்பவற்றுக்காகச் செயலணியொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும், மேற்போந்த செயலணியிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு துறைகளின் மனித வளங்களின் பிரதிநிதித்துவம் மிக முக்கியமான காரணியாக இனங்காணப்பட்டுள்ளதாதலாலும் ;

மேலும், இச்செயலணியின் அங்கத்துவ உள்ளடக்கத்தின் பல்வகைத் தன்மையை மென்மேலும் விரிவடையச் செய்ய வேண்டுமெனக் காணப்படுவதாலும் ;

1A - G 28724 — 72 (2018/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் வண்ணம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது பெரும் நம்பிக்கை வைத்துக்கொண்டு மேற்கூறிய,

1. திரு. எச். ரி. கமல் பத்மசிறி, செயலாளர், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
2. திரு. பந்துல விக்ரமாராச்சி, செயலாளர், சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு
3. திரு. சுனில் ஹெட்டிஆரச்சி, செயலாளர், கல்வி அமைச்சு
4. திரு. ஏ. பீ. ஜீ. கித்சிறி, செயலாளர், வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு
5. திரு. டி. எம். ஏ. ஆர். பி. திசாநாயக்க, செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
6. சனாதிபதி சட்டத்தரணி திரு. கபில எம். வைத்தியரத்ன, செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
7. திருமதி டபிள்யூ. ஜே. பீ. எஸ். வீரக்கோன், செயலாளர், சமூக வலுவூட்டல்கள் அமைச்சு
8. திரு. எஸ். டி. கொடிக்கார, செயலாளர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
9. திருமதி கே. ஜீ. அசோக்கா அலவத்த, செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

ஆகிய உங்களை மேற்போந்த சனாதிபதியின் பணிப்புரையின் வண்ணம் தாபிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகளை நெறிப்படுத்தல், கூட்டிணைத்தல் மற்றும் தொடராய்வு செய்தல் என்பவற்றுக்கான செயலணியின் அங்கத்தவர்களாக நான் இத்தால் நியமிப்பதுடன் மேற்போந்த முதல் பணிப்புரையின் (அ) தொடக்கம் (எ) வரையிலான பணிகளை செயற்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு உங்களுக்கு இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்துப்பதினெட்டாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின்கீழ் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

10-1457

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.